# கிராம தமிழ் பெண்களின் அதிகார வலுவின் மீது கல்வியின் செல்வாக்கு
# (Influncing of Education on Empowerment of Rural Tamil Women)

Kandaiah Sutharmi and Santhirasegaram S.

**ஆய்வுச் சுருக்கம்**

வாழ்க்கையின் சமஉரிமைகளை ஆண்களும், பெண்களும் அனுபவிக்க வேண்டும். எனினும் கிராமப் புறத்தை அவதானிக்கின்ற போது ஆண்கள் பெண்களுக்கு இடையில் சமத்துவத் தன்மை மிகவும் குறைவாக காணப்படுகின்றது. இதற்கு கல்வி அறிவு இந்த சமத்துவத்தை பேணுவதற்கு தடையாக அமைகின்றது. எனவே பெண்களுக்கு கல்வி அறிவு என்பது அவசியமானது ஒன்றாகும். பெண்களின் சுதந்திரத்தின் பெறுமதி கல்வி அறிவின் ஊடாகவே வெளிப்படுத்தப்படுகின்றது. பெண்களின் உரிமைகளுக்கு சம அந்தஸ்து வழங்கப்படுகின்ற போது அவர்கள் எதிர்கொள்ளும் சவால்களை சமாளிக்க முடியும்.
அந்தவகையில் தலைமுறை தலைமுறையாக கிராமப் புறங்களில் ஆயுள் முழுவதுமே கலாசாரம் ,சமயம், சம்பிரதாயம், பழக்கவழக்கங்கள், பழைய மரபுகள் போன்ற காரணிகளால் சுழப்பட்டு பெண்ணானவள் அடங்கிப் போதல், சரிக்கட்டிக்கொண்டு போதல், சமாளித்துக் கொண்டு போதல் ஆகிய பண்புகளைக் கொண்டவளாக இருக்கவேண்டும் என்று அநேகமாக சமூகங்களில் எதிர்பார்க்கப்படும் ஒரு விடயமாக இருந்துவருகின்றது. எனினும் பெண்கள் அதிகாரமிக்கவர்களாக மாற்றப்படும் போதே அவர்களை சம உரிமையை பெற முடியும். இதற்கு கல்வி என்பது அவசியமான ஒன்றாகும். பெண்களின் அதிகாரவலுவில் கல்வியின் பங்களிப்புப் பற்றி ஆராயப்படுகின்றது. யாழ்ப்பாணத்தில் மீசாலைக் கிராமத்தில் 50 குடும்ப பெண்களை மாதிரியாக கொண்டு செய்யப்பட்ட ஆய்வில் பெண் கல்வி கற்ற ஆண்டுகள், கல்வி கற்ற பாடசாலை, உயர்தரத்தில் கல்வி கற்ற துறை போன்ற காரணிகள் பெண்களின் அதிகார வலு மீது தாக்கத்தை கொண்டிருக்கின்றன. இணைவுக் குணகம், விபரண புள்ளிவிபர கணிப்பீடுகள் ஊடாக இவை நிருபிக்கப்படுகின்றன.

**திறவு சொற்கள்**: பெண்கள், வலுவூட்டல், கல்வி,